**ஹோமாகம பிரதேச சபை**

**கொழும்பு மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 08 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹோமாகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் மற்றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் பெறுமதிகள் கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தன.

(அ) மீளாய்வாண்டில் மூன்று அமைச்சர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 8,000 ஆன தொலைபேசிப் படிகள் செலுத்த வேண்டியவையாக கருதி தொலைபேசி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு கடன்பட்டோர் கணக்கினை செலவு

வைத்தமையால் தொலைபேசி செலவினக் கணக்கு மற்றும் கடன்பட்டோர் கணக்கு ஆகியன அந்த அளவினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) தலைமை அலுவலகத்தின் 2015 திசெம்பர் மாதத்திற்கான மின்சார பட்டியல் ரூபா 78,387 ஆக இருந்த போதிலும் அது மின்சார செலவின கணக்கு மற்றும் கடன்பட்டோர் கணக்கு ஆகியவற்றில் ரூபா 90,000 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் அந்த கணக்குகள் ரூபா 11,613 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) 2015 மார்ச் 25 ஆந் திகதி சபையின் வளவில் அமைந்துள்ள பதிவேட்டு அறையில் தீயினால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 1,202,869 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை வங்கியின் பொது நிதிக் கணக்கிற்காக 2015 ஆகஸ்ட் மாதத்தில் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்ககூற்றின் ரூபா 361,288 தொகை பெறுமதியான இனங்காணப்படாத வைப்பு மீதியொன்றினை தீர்த்து கணக்கு வைக்கப்படாத காரணத்தால் 2015 ஆகஸ்ட் முதல் இது வரையிலும் வங்கி கணக்கிணக்கக்கூற்றில் இந்த மீதி தொடர்ந்தும் முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்தது.

(உ) தலைமை அலுவலகத்தின் 2015 திசெம்பர் மாதத்திற்கான நீர் பட்டியலுக்காக ரூபா 25,914 ஆன மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான நீர்ப் பட்டியல் செலவினம் மற்றும் கடன்பட்டோர் கணக்கு ரூபா 25,914 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டினுள் உள்ளூராட்சி அமைச்சினால் சபைக்கு நன்கொடையளிக்கப்பட்ட 3 வாகனங்களின் பெறுமதியான ரூபா 20,907,473 கணக்கு வைக்கப்பட்டிராதுடன், அந்த வாகனத்தை சபைக்கு கையேற்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 203,742 பெறுமதியான முத்திரை வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2015 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணங்களுக்கான கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான பெறுமதி சேர்வரி தொடர்பில் ஈட்ட வரி மற்றும் முடிவு வட்டி ஆகியவற்றை கழிக்கும் போது ரூபா 623,804 தொகையான பெற வேண்டிய மீதியொன்று நிலவிய போதிலும், நிதிக்கூற்றுக்களின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வரவு மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 01/2012 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.3 அம் பந்தியின் பிரகாரம், ஒரு சங்கத்திற்கு 03 ஒப்பந்தங்களுக்கு மேற்பட வழங்கப்பட கூடாத போதிலும், ஒரு சங்கத்திற்கு மூன்றுக்கு அதிகமாகும் விதத்தில் 154 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 02 வருடங்களுக்கு முன்பிருந்து முன் கொண்டு வரப்படும் ரூபா 3,039,929 தொகையான வைப்புக்கள் தொடர்பில் இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 371 (2) இன் பிரகாரம் வழங்கப்பட்ட உப கட்டுநிதிகள் அது வழங்கப்பட்டமைக்கான பணி முடிவடைந்ததும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 5 முதல் 13 வருடங்கள் வரையான காலமாக தீர்க்கப்படாதுள்ள 04 முற்பணங்களுக்குரிய ரூபா 60,500 ஆன மீதியொன்று காணப்பட்டது.

(ஈ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 751 (1) இன் பிரகாரம் கிடைக்கும் அனைத்து பொருட்களும் பொருட்பதிவேடு / இருப்புப் பேரேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டியபோதிலும், சபையின் அனைத்து மயானங்களினதும் லேனகல பொதுசன நிலையத்திலும் காணப்படும் பொருட்களை பொருட்பதிவேட்டில் உட்படுத்தி பராமரிக்கபட்டிராததுடன், வாசிகசாலை மற்றும் சில முன்பள்ளிகளின் பொருட்பதிவேடுகளும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 நிகழத்தக்க பொறுப்புக்கள்

சபைக்கு எதிராக வெளித்தரப்பினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த 02 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டவாறு இருந்த போதிலும், அது தொடர்பில் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கு விடய கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 336,195,933 ஆக இருந்ததுடன், அவற்றிற்குரிய பயன்பாட்டு பட்டோலைகளின் பிரகாரமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 258,194,607 ஆக காணப்பட்டமையால் ரூபா 78,001,326 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.5 தீர்க்கப்படாத கணக்குகள்

பல வருடங்களாக முன்கொண்டுவரப்படும் 03 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 169,582 கூட்டுப் பெறுமதி மீளாய்வாண்டிலும் தீர்க்கப்படாமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(அ) தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை

ரூபா 80,670,085 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய கணக்கு மீதிகளுக்குரிய கணக்காய்வு சான்றுகள் இல்லாதிருந்தமையால், அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2015 மே 30 ஆந் திகதியளவில் ரூபா 5,670,159 பெறுமதியான 01 கணக்காய்வு ஐய வினாவிற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 125,868,478 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 124,487,286 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

-------------------------------

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம் ,உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------

செயலாளரால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடல்கள் | உள்ளபடியான அறவீடுகள் | திசெம்பர் 31 இல் உள்ளபடியான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 49,580,012 | 33,395,852 | 39,130,776 | 43,952,848 |
| வாடகை | 4,098,764 | 5,176,350 | 7,697,306 | 1,577,808 |
| களியாட்ட வரி | 67,115 | 601,720 | 633,920 | 34,915 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியின் உள்ளபடியான வீதவரியின் நிலுவை மீதி ரூபா 43,952,848 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிலுவை சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.2.3 வாடகை

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,577,808 தொகையான நிலுவை கடை வாடகை மீதியினுள் நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டியதான வாராந்த சந்தை கடை வாடகையான ரூபா 271,215 தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 271,215 பெறுமதியான ஹோமாகம வாரச் சந்தையின் நிலுவை கடை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 36 மயானங்கள் காணப்படுவதுடன், மீளாய்வாண்டினுள் மயானங்களை ஒதுக்கியதன் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா 186,000 ஆக இருந்த போதிலும், அந்த அனைத்து மயானங்களுக்கும் போதியளவான ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தி முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தியகம தாய்சேய் சிகிச்சை நிலையம் மூடப்பட்டிருந்தமையால் கர்ப்பிணித் தாய்மாருக்கு அதன் மூலம் பெறக்கூடியதாக இருந்த சேவைகள் இழக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 யூலை 14 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை 4/2015 ஆம் இலக்கத்தின் 02 ஆம் பிரிவிற்கு முரணாக சபையின் 05 உழவு இயந்திரங்களை காப்பீடு செய்வதற்காக காப்புறுதி முகவர் ஒருவருக்கு ரூபா 56,308 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) அரசியல் தலைவரொருவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக பத்திரிகை அறிவித்தலொன்றை பிரசுரிப்பதற்கான மீளாய்வாண்டின் போது ரூபா 156,800 தொகை செலுத்தப்பட்டிருந்தமை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 ஆம் பிரிவில் உள்ளடங்காத செலவினமொன்றாகும்.

(ஆ) மீளாய்வாண்டினுள் ரூபா 1,944,000 பெறுமதியான 12 மடி கணனிகளை கொள்வனவு செய்யும் போது அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஊழியர் கடன்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,508,287 ஆக இருந்ததுடன், அவற்றுள் இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா 2,084,723 ஆகும். அந்த மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், நிலுவை மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வொன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

ரூபா 1,390,625 கூட்டுப் பெறுமதியுடைய 02 வாகனங்கள் மற்றும் பெறுமதி இனங்காண முடியாத 03 வாகனங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

மீளாய்வாண்டினுள் 662 பணிகளில் ரூபா 224,886,363 தொகையான கிரயம் மேற்கொள்ளப்பட்டு 525 பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், எதிர்வரும் ஆண்டில் பூர்த்தி செய்வதற்காக 48 பணிகள் காணப்பட்டன. 85 பணிகள் கைவிடப்பட்டன.

## 3.6 திணமக்கழிவு முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் ஒரு மாதத்தில் கொட்டப்பட்ட குப்பைகளின் அளவு 753 - 1074 டொன் வரையான வீச்சினுள் காணப்பட்டதுடன், ஆண்டினுள் சேகரிக்கப்பட்ட 11,179 டொன் அளவான குப்பை கரதியான குப்பை சேகரிக்கும் நிலையத்தில் கொட்டப்பட்டிருந்தது. அதற்காக கழிவு முகாமைத்துவ அதிகார சபைக்கு ரூபா 6,665,223 தொகையும், கழிவுகளை கொண்டு செல்வதற்காக தனியார் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு ரூபா 10,305,120 எனுமாறு ரூபா 16,970,343 கூட்டுத்தொகை கழிவு முகாமைத்துத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. பிரதேசத்தில் நிலவும் குப்பை பிரச்சினைக்கு தீர்வொன்றாக வீட்டுரிமையாளர்களுக்கு கூட்டெரு கொள்கலன்களை வழங்கி வீட்டிலேயே கழிவுகளை அகற்றுவது தொடர்பில் மக்களை அறிவூட்டும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டவாறு இருந்ததுடன், உழவு இயந்திரங்கள் மூலம் உக்காத குப்பைகளை மாத்திரம் சேகரிப்பதற்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போது கிரயத்தினை குறைப்பதற்காக அந்த வேலைத்திட்டம் மேலும் பரவாக்கலாக்கப்பட வேண்டுமென கணக்காய்வின் போது முன்மொழியப்பட்டிருந்தது.

# 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

2015 ஆம் ஆண்டிற்குரியதாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய PED/RED/01/012014/01 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்துதல்

2003 யூன் 03 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டினுள் கூட்டப்பட வேண்டிய ஆகக்குறைந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிர்வாகம்

(உ) ஒப்பந்த நிர்வாகம்

(ஊ) உள்ளகக் கணக்காய்வு